**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KILVELUR**

**C CNo. 14/2024**

LW 1 PW 1

| Name | செந்தில்குமார் | | |
|---|---|---|---|
| Husband Name | பன்னீர்செல்வம் | Calling | |
| Village | வேட்டைக்காரனிருப்பு | Religion | |
| Taluk | | Age | 50 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**16-07-2025**

**Accused present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வேட்டைக்காரனிருப்பில் வசித்து கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போனது எனது தந்தை ஆவார். ஆஜர் எதிரியை தெரியும்.

2 கடந்த 12.09.2023 தேதி காலை 6 மணியளவில் எனது அப்பா இரு சக்கர வாகனத்தில் பரவை காய்கறி மார்க்கெட்டிற்கு சென்று விட்டு வியாபாரத்தை முடித்து விட்டு புதுப்பள்ளி பாலம் அருகே வந்து கொண்டிருந்தபொழுது எனது அப்பா வந்த அதே திசையில் பின்புறமாக வந்த TN24 AM6996 என்ற கார் பின்புறமாக வந்து மோதி விபத்தை ஏற்படுத்தியது. அந்த விபத்தில் எனது அப்பாவிற்கு ஒரு பக்க காலும் கையும் காயம் பட்டது. இந்த விபத்து சம்பந்தமாக எனது அண்ணன் தொலைபேசி மூலமாக தகவல் சொல்லி எனக்கு தெரியும். நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தேன்.

3. நான் எனது அப்பாவை மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலமாக நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். விபத்து ஏற்படுத்தியவரை என் அண்ணன் கூற நான் தெரிந்து கொண்டேன். அங்கிருந்து மேல சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கு அவருக்கு சிறுநீரகம் செயலிழந்ததாக மருத்துவர்கள் கூறினார்கள். அன்றைய இரவு 2 மணியளவில் சிகிச்சை பலனின்றி என் அப்பா உயிரிழந்தார். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில உள்ள கையொப்பம் என்னுடையது தான். **மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரிடையாக தெரியாது. சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டு தான் சம்பவ இடம் சென்றேன். நான் கையொப்பம் செய்த புகார் வாக்குமூலம் போலீசார் எழுதியதில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல, மருத்துவமனையில் போலீசார் எழுதி அதில் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த புகார் வாக்குமூலத்தில் நிறைய அடித்தல் திருத்தல் இருந்தது என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

2. எனது தந்தை மார்க்கெட்டிற்கு சென்று பொருட்களை வாங்கி இரு சக்கர வாகனத்தில் கொண்டு வருவார் என்றால் சரிதான். காய்கறி பொருட்களை விற்று விட்டு மீன் வாங்கி வருவார். சம்பவம் நடந்த இடத்தில் நிறைய கடைகள் உள்ளது என்றால் இல்லை, சம்பவ இடத்திலிருந்து சற்று தள்ளி எதிர்திசையில் இருந்தது. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் மருத்துவமனை சென்று விட்டு தற்போது சம்பவ இடத்திற்காக சென்றதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் 2, 4, 5, 6 எனது உறவினர்கள் என்றால் சரிதான்.

3. எனது அப்பா இடதுபுறத்திலிருந்து வலது புறத்திலிருந்து கடைக்கு செல்வதற்காக கவனக்குறைவாக அவரது இரு சக்கர வாகனத்தை திருப்பியதால்

இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. இழப்பீடு பெறுவதற்காக போலீசார் சொல்லிக் கொடுத்தற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/- ர. மீனாட்சி எம்.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கீழ்வேளூர்

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KILVELUR**

**C CNo. 14/2024**

LW 4PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | ராஜாங்கம் | | |
| Husband Name | சுப்பிரமணியன் | Calling | |
| Village | வேட்டைக்காரனிருப்பு | Religion | |
| Taluk | | Age | 55 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

16-07-2025 **Accused present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வேட்டைக்காரனிருப்பில் வசித்து கட்டட வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன பன்னீர்செல்வம் என்பவர் எனது ஊர்க்காரர். ஆஜர் எதிரியை தெரியும்.

2 . கடந்த 12.09.2023 ம் தேதி காலை 6 மணியளவில் புதுப்பள்ளி பாலம் ரோட்டில் நான் நடந்து சென்று கொண்டிருந்தபொழுது நான் சென்ற திசைக்கு எதிர் திசையில் TN24 AM6996 என்ற வெள்ளை நிற கார் வேகமாக வந்தது. காருக்கு முன்புறமாக அதே திசையில் பன்னீர்செல்வம் அவருடைய XL இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். கார் வேகமாக வந்து அவரின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது. நான் அங்கு சென்று பார்த்தபோது தான் அவர் பன்னீர்செல்வம் என்று தெரிந்து கொண்டேன்.

3. விபத்து ஏற்படுத்திய அந்த காரை ஆஜர் எதிரி தான் ஓட்டி வந்தார். நான் சென்று பார்த்தபோது பன்னீர்செல்வத்திற்கு ஒரு கையிலும் காலிலும் பலத்த காயம் பட்டிருந்தது. நான் உடனடியாக அ.சா. 1க்கு போன் மூலம் தகவல் சொன்னேன்.

அ.சா. 1 உடனடியாக விபத்து நடந்த இடத்திற்கு வந்து விட்டார். பிறகு ஆம்புலன்ஸ் மூலமாக நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் சாட்சியை மற்ற கண்ணுற்ற சாட்சிகளுடன் சேர்த்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி மனு அளித்ததின் பேரில் மனு அனுமதிக்கப்பட்டு, குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/- ர. மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கீழ்வேளூர்

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KILVELUR**

**C CNo. 14/2024**

LW 5 PW 3

| Name | சுரேஷ் | | |
|---|---|---|---|
| Husband Name | காளிமுத்து | Calling | |
| Village | வேட்டைக்காரனிருப்பு | Religion | |
| Taluk | | Age | 45 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**16-07-2025** **Accused present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வேட்டைக்காரனிருப்பில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன பன்னீர்செல்வம் என்பவர் எனது ஊர்க்காரர். ஆஜர் எதிரியை தெரியும். அவர் டிரைவர் ஆவார்.

2. கடந்த 12.09.2023 ம் தேதி காலை 6 மணியளவில் புதுப்பள்ளி பாலம் அருகில் வடபுறம் எனது வயலுக்கு நான் சென்று கொண்டிருந்தேன். அப்போது பன்னீர்செல்வம் அவருடைய XL இரு சக்கர வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்கு பக்கமாக எனக்கு எதிர் திசையில் வந்து கொண்டிருந்தார். அவர் வந்து கொண்டிருந்த திசைக்கு பின்புறமாக வெள்ளை நிற Fortuner கார் வேகமாக வந்து அவருக்கு பின்பக்கமாக மோதி விபத்தை ஏற்படுத்தியது. நான் சென்று பார்த்தபோது அவருக்கு வலது பக்க கை கால் முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய Fortuner காரை ஓட்டி வந்தது ஆஜர் எதிரி தான். அங்கிருந்த ராஜாங்கம் என்பவர் பன்னீர்செல்வத்தின் மகனுக்கு உடனடியாக தொலைபேசி மூலமாக தகவல் சொன்னார்கள். அ.சா. 1 உடனடியாக சம்பவ இடத்திற்கு வந்து

விட்டார். பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலமாக நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். இந்த விபத்து சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் சாட்சியை மற்ற கண்ணுற்ற சாட்சிகளுடன் சேர்த்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி மனு அளித்ததின் பேரில் மனு அனுமதிக்கப்பட்டு, குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/- ர. மீனாட்சி எம்.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கீழ்வேளூர்